33 நாட்கள் தொடர் நற்கருணை ஆராதனை

நாள் : **01.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	GENERALATE	BALRAMPUR DIDWANA	BEGUSARAI DGL COLLEGE
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : கானாவில் திருமணம் யோவா 2: 1-11

தியானம் : திருமணத்தில் இரசம் தீர்ந்து விடுகிறது.

- தனிவாழ்வில் என் ஆற்றலுக்குத் தேவையான இரசம் பல சமயங்களில் தீர்ந்து போகிறது. பலமிழந்த, சுவை இழந்த மனிதர்களாக உலா வருகிறோம்.
- குழுமங்களில் இறையாற்றல் என்ற சுவை குன்றிப்போகக் காரணமாகிறோம். இதனால் குழுமத்தின் சாரம் இழந்து போகிறது.
- சமூகவாழ்விலும் மனிதர்கள் பொருளுக்கும் பணத்திற்கும் அடிமையாகி இறைமை குன்றிப் போவதால் வாழ்வின் சுவை குறைந்த மனிதர்களாய் உலா வருகின்றனர்.
- இயேசுவே தண்ணீரை இரசமாக மாற்றுகிறார். அவரிடம் சரணடைவோம். நாமும் இறைமையின் சுவையால் நிரப்பப்படுவோம். இந்த பிரபஞ்சமும் இறைமையின் சுவையால் நிரப்பப்படும்

மன்றாடுவோம் : புதிய இரசத்தை நம் தனி வாழ்விலும் குழும வாழ்விலும் சமூகத்திலும் பெருகச்செய்ய இறைவா உம்மை இறைஞ்சுகிறோம்.

நாள் : **02.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	BETHANIA	KATHGODAM HILSA	HAZARIBAG KARAYANCHAVADI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : அரச அலுவலர் மகன் குணமாதல் யோவா 4: 43-54

தியானம் : "நீர் புறப்பட்டுப்போம் உம் மகன் பிழைத்துக்கொள்வான்."

- இயேசுவின் ஆற்றல் தரும் வார்த்தைக்குக் கிடைத்த பரிசு அரசு அலுவலர் மகன் குணமானது.

- வார்த்தை வலிமையான ஆயுதம் என்பதை உணரத் தவறிய குற்றத்திற்காய் மன்னிப்பு வேண்டுவோம்.
- தனிவாழ்வில் மற்றவர்களைப் பிழைக்கச் செய்யும் வார்த்தைகள் பேசுகின்றேனா?
- என் வார்த்தை நோய் நீங்கச்செய்கிறதா?
- குழுமத்தில் சிலரின் வார்த்தைகளாலே இறந்து போனவர் பலர் இருக்கிறார்களே. நானும் இதற்கு காரணமா?
- நலமான வார்த்தைகளால் மட்டுமே நன்மையும் ஆரோக்கியமும் பெருகும். நலமான நேர்மறையான ஆற்றல்தரும் வார்த்தைகளை எப்போதும் பேச உறுதி கொள்வோம்.

மன்றாடுவோம் : எம் வார்த்தைகள் உண்மையும் நன்மையும் அன்பும் நிறைந்தவையாய் உலகை வாழ வைக்க வரம்தர மன்றாடுகின்றோம்.

நாள் : **03.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	BETHLEHEM	KOVALAM JDB HOME MAMANDUR NJCC	MAMANDUR N J MAMANDUR NJSS
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பேய் பிடித்தவன் குணமாதல் மாற் 1: 21-27

தியானம் : இறைமைத் தன்மை நம்மில் குறைந்துவிடும்போது தீமை நம்மை ஆட்டிப்படைக்கிறது. பேய் பிடித்திருப்பவர் தான் என்ன செய்கிறோம் என்ற சுயநினைவின்றி இருக்கிறார்.

- நம் தனி வாழ்வில் தீமையின் ஆதிக்கம் மேலோங்கி நம்மை அறியாமலே பிறரை காயப் படுத்தும் நேரங்களை நாம் நினைத்துப் பார்ப்போம்.
- குழுமத்தில் பகை, வெறுப்பு, அமைதியின்மையை உருவாக்குவது நம் தீய சக்திகள்தானே.
- கொரோனா என்ற தீமை நம் சமூகத்தை ஆட்டிப்படைக்கிறது. இதை எப்படி விரட்டுவது?
- நமது உடலின் எண்ணங்களின் ஆன்மாவின் அபரிமிதமான இறைசக்தியால் மட்டுமே இதைவிரட்ட முடியும்.
- நிலையான கடவுளில் நிலைபெற்ற கடவுள் உணர்வால் மட்டுமே இந்தப்பெருந்தொற்றை நம்மிலும் பிறரிலும் எதிர்கொள்ள இயலும்.

மன்றாடுவோம் : சாத்தானின் அவதாரமான பெருந்தொற்றை விரட்டியடிக்கும் பேராற்றலை எம்மிடையே உருவாக்க இறைஞ்சுகிறோம்.

நாள் : **04.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	MANNAI COLLEGE	MANSI MUZAFFARPUR	MATUKDWAR NALLAMANAICKENPATTI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : ஈராயப்பரின் மாமியார் குணமாதல் மாற் 1: 29-31

தியானம் : ஈயேசு கையைப் பிடித்துத் தூக்கினார்.

- ♠ என் தனிவாழ்வில் எத்தனை பேரின் கையைப்பிடித்து தூக்கி விட்டிருக்கிறேன்? காய்ச்சல் என்பது நம் உடலின் வெப்பம் அதிகமாதல். அப்படித்தான் நம் உடலில் இயல்பாக இருக்கின்ற உணர்வுகள் அதிகமாவதால் கோபம், எரிச்சல், ஆக்ரோஷம் வெளிப்படுகிறது. இப்படிப்பட்டவர்களை இயல்பாக ஒதுக்கி விடுகிறோம். இவர்களின் கரங்களைப் பிடித்து தூக்கி விடுவோமா? காய்ச்சல் குறைந்தால் அவர்கள் நமக்கு அன்பு சேவை புரிவார்கள்.

  வெறுப்பு கோரம் பகைமையில் உழலும் உலகை அன்புக் கரம் நீட்டி தூக்கி விடுவோம்.

மன்றாடுவோம் : இறைவா! அன்புக்கரம் கொண்டு சந்திக்கும் என்னோடு வாழும் அனைவரையும் தூக்கிவிட அருள்தாரும்

நாள் : **05.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	MOLASUR	SALEM COLLEGE SITAGARH	SALEM KOLLAPATTY UTTARETIA
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : தொழு நோய் குணமாதல் மாற் 1: 40-45

தியானம் : தீமையைக்கண்டு ஒதுக்கிவிடத்துடிக்கும் எம் அறியாமையிலிருந்து எம்மைத் தூக்கிவிடும். எமது நோயை நீக்க உம்மால் முடியும்.

- ▲ பலவீனமான என் விசுவாசம் இரட்டைத் தன்மையாய் உள்ளது. நம்புகிறேன் என்று நாவினால் சொல்லும் என்னால் முற்றிலும் அவரிடம் ஒப்படைக்க இயலவில்லை. இறைவா! என் பற்றுறுதியை ஆழப்படுத்தும்.

- ▲ குழுமத்திலும் நம்பிக்கை ஆழமற்றதாய் இருக்கிறது. நம்புவதால் மற்றவர் நம்மை ஏமாற்றுவார் என நினைத்து எதிலும் ஆழம் இல்லாமல் வாழ்கிறோம். நம் நம்பிக்கையை மட்டுமே ஆண்டவர் கணக்கில் எடுத்துக்கொள்கிறார். எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி நம்பினால் மட்டுமே அற்புதம் நிகழும்.
- ▲ உலகில் உடன் வாழும் மனிதரிடமும், பிரபஞ்சத்திடமும் இயற்கை ஜீவராசிகள் அனைத்தோடும் நம்பிக்கை உறவை ஆழப்படுத்த அதனால் உலகம் தொழுநோய் போன்ற அவலட்சணம் நீங்கப்பெற அருள் கேட்போம்.

மன்றாடுவோம் : விசுவாசத்தில் ஆழம்பெறவும் இரட்டை மனநிலை சந்தேகங்கள் விலகவும் நாமும் மானுடமும் உலகமும் நம்பிக்கையால் அழகுபெறவும் அருள்தர மன்றாடுவோம்.

நாள் : **06.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	NADU STREET	ALWARPET CHINDADRIPET	ARAKKONAM KADAVENDI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : நூற்றுவர் தலைவர் பணியாள் குணம் பெறல் லூக் 7: 1-10

தியானம் : அதிகாரத்தில் இருப்போரிடம் காணப்பட வேண்டிய பண்புகளை ஒட்டுமொத்தமாகக் கொண்டிருந்தார் நூற்றுவர் தலைவர்.

- பணியாளர்மீது தலைவர் மதிப்பு வைத்திருந்தார்.
- மூப்பர்கள் தலைவன் தகுதியுடையவன் என்று சான்று பகர்கிறார்கள்.
- நூற்றுவர் தலைவன் தன்னைத் தகுதி இல்லாதவனாக உணர்கிறான் (தாழ்ச்சி).
- இயேசுவைத் தொந்தரவு செய்வதை விரும்பவில்லை.
- பல சமயங்களில் நம்மை அதிகம் தகுதியுள்ளவர்களாக நாம் கருதுவதனாலேயே குழுமத்தில் நிறுவனத்தில் பிரச்சினைகள் உருவெடுக்கின்றன.
- நாமும் நம்மைச் சுற்றியுள்ள உலகமும் அதிகத் தகுதியுடையதாகக் கருதுவதால்தான் கொரோனா நம்மைவிடத் தகுதிவாய்ந்ததாகத் தன்னைக் காட்டிக்கொள்கிறது. இனியாவது நம்மைத் தாழ்த்துவோம். உலகம் நலம் பெரும். இறையாற்றல் செயல்பட தாழ்ச்சியால் வழிவிடுவோம்.

மன்றாடுவோம் : இறைவா! எங்களின் ஆணவப்போக்கே இறையாற்றல் என்ற சூரியன் எங்கள் பூமியில் உதிக்கத் தடையானோம். எம்மை தாழ்ச்சியுடையோராய் உருமாற்ற வரம் தாரும்.

நாள் : **07.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	NAZARETH ILLAM	KALLAMBEDU KANCHI COLLECTORATE	KALPET KOVALAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : முடக்குவாதமுற்றவரைக் குணமாக்குதல் மத்: 9: 1-8

தியானம் : மகனே துணிவோடிரு உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.

- ♣ பயம், கலக்கம், குழப்பம், சஞ்சலம் போன்றவை நம்மை முடக்கிவிடுகின்றன.
- ♣ நாம் அச்சமின்றி துணிவுடன் இருந்தால் இறையாற்றல் அனைத்துப் பாவங்களில் இருந்தும், பலவீனங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கும்.
- ♣ நம் குழுமத்தில் நிறுவனங்களில் அச்சமின்றி அனைவரையும் வாழ வழிவிடுகிறோமா? பயத்தை விதைக்கிறோமா? பயம் உள்ள இடத்தில் பாவம் எளிதாகக் குடியிருக்கும்.
- ♣ அச்சமில்லா உலகை உருவாக்குவோம். ஒன்று மற்றொன்றை ஆதிக்கம் செய்ய முயல்வதால் உருவாகும் பாவம் உலகை முடக்கிவிடும்.
- ♣ பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக மன தைரியத்தோடு மாண்போடு வாழ அருள் வேண்டுவோம்.

மன்றாடுவோம் : உலகின் பாவங்கள் நீங்கி நலம்பெறவும் அச்சம் தரும் அவநம்பிக்கைச் சூழல்கள் விலகவும் கொரோனா விதைத்த பயம் அடியோடு நீங்கவும் அருள்தர இறைவா இறைஞ்சுகிறோம்.

நாள் : **08.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	NOVITIATE	KOVILANUR LEHODEY ILLAM	LITTLE MOUNT MADANAPALLI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : கை சூம்பியவர் ஓய்வு நாளில் நலம் பெறுதல் மாற் 3: 1-6

தியானம் : குற்றம் சுமத்தும் நோக்குடன் அவரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டேயிருந்தனர்.

- ★ பிறர் நன்மை செய்வதை பொறுத்துக்கொள்ள முடியாமல் அவர்கள் மீது பழிசுமத்துவதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் பிடிவாத மனத்திலிருந்து குணமடைய விரும்புவோம்.
- ★ பிறர் குற்றமே கண்டுபிடித்தாலும் இயேசுவைப் போல் செய்ய வேண்டிய நன்மையை செய்து கொண்டே இருப்போம்.

★ குழுமத்தில் சிலர் மீது நாம் சுமத்தும் பழிகள் பொறாமையின் வெளிப்பாடாய் இருக்கிறது. இருந்தாலும் உள்ளம் கடினப்பட்டுப்போனதால் மேலும் மேலும் அவர்களுக்குத் தீமை செய்ய நம்மோடு சில ஏரோதியர்களையும் சேர்த்துக் கொள்கிறோம். மனம் வருந்தி மனம் திருந்துவோமா?

★ உலகின் மிகப் பெரிய தீமைக்குக் காரணமே பொறாமையால் மற்றவர்களின் செயல்களுக்கு நாம் கொடுக்கும் தவறான விளக்கங்கள்தான். பிறருக்கு நன்மை செய்ய இயலாவிடினும் தீமைக்கு திட்டமிடாமல் இருப்போம். இறையருள் கேட்போம்.

மன்றாடுவோம் : பிறர் மீது சொல்லப்படும் பழிப்புரைகள், தவறான தீர்ப்பிடுதலால் சும்பிப்போன வாழ்வுகள் நலம் பெற இறைவா! அருள்தாரும். எப்போதும் நன்மை செய்வதில் தளராதிருக்க அருள் தாரும்.

நாள் : 09.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	PATNA	MALLIGAPURAM PANNUR	MUDICHUR PORUR
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : நயீன் கைம்பெண் மகன் உயிர்பெறுதல் லூக் 7: 11-17

தியானம் : இறந்தவர் எழுந்து உட்கார்ந்து பேசத்தொடங்கினார்.

❖ என் தனி வாழ்வில் சில சமயம் நான் இறந்திருக்கிறேன். என்னைப் பார்த்து பிறர் அழும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறேன். செயலிழந்த என்னால் ஒன்றும் செய்ய இயலாமல் அடுத்தவர் தூக்கிச் செல்லும் நிலையில் வாழ்கிறேன்.

❖ ஆழ்ந்த கவலை, துக்கம், அவமானம், அவநம்பிக்கை சாவில் நம்மை ஆழ்த்திவிடும். பிறரின் பரிதாபத்துக்கு உரியோராய் நாம் மாறிவிடுகிறோம்.

❖ நமக்காக நாம் கூட அழ முடியாது. நம்மை நேசிக்கும் தாய்தான் அழுகிறாள். இப்படிப்பட்ட நிலையில் வாழும் நம்மவர்களுக்காக, நம் உடன் வாழும் சகோதரிகளுக்காக, உலகுக்காக அழுது ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

❖ ஆன்மீகத்திலும், அர்ப்பணத்திலும், உடலிலும், இறந்தவர்களாய் இருப்பவர்களுக்காக அழுது மன்றாடுவது என் கடமை. என் அழுகையான, அக்கறையான மன்றாட்டு இந்த உலகை உயிர்ப்பிக்கும் வல்லமை படைத்தது.

மன்றாடுவோம் : இறைவா! இந்த உலகமே எம் வீடு. மானுடமே எம் சோதரம். இதில் இறந்துபோகின்ற பலவற்றை என்னால் உயிர்ப்பிக்க இயலும். அக்கறையும், அன்பும், கரிசனையும் இந்த உலகை உயிர்ப்பிக்க வல்லமை கொண்டது என்ற உண்மையை நான் உணர அருள்தாரும்.

நாள் : **10.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	T. C. PALAYAM	PUDUPATTINAM SATYAVEDU	SADRAS SELLAMPATTIDAI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : காற்றையும் கடலையும் அடக்குதல் மாற் 4: 35-41

தியானம் : நம் அச்சத்திற்குக் காரணம் புயல் அடிப்பதும் அலை நம் வாழ்க்கைப்படகின் மீது மோதுவதும்தான்.

- ▲ நம் பார்வை புயலையும் அலைகளையுமே நோக்குகிறது. அருகில் இருக்கும் இயேசுவைக் காணத் தவறி விடுகிறது. இயேசுவின் மீது நம் கவனம் பதியட்டும்.
- ▲ இந்தக் கொரோனா பெருந்தொற்றும் மீண்டும் மீண்டும் நம்மிடம் தோற்றுவிக்கப்படும் அச்சத் தினால் அதிகமாகிறது. ஆண்டவர் மீது அசையா நம்பிக்கைக் கொண்டால் தானாகவே பெருந்தொற்று சரணடைந்துவிடும்.
- ▲ அச்சமின்னை என்பது அலட்சியமாய் இருப்பது அல்ல. அரசு நமக்குக் கொடுக்கும் அத்தனை நெறிமுறைகளையும் கவனத்தோடு கடைபிடிப்பது அவசியமான முன்னெச்சரிக்கைகளை எடுத்துக் கொள்வது.
- ▲ நம்மால் செய்யக் கூடிய அனைத்தையும் செய்து முடித்தபின் ஆண்டவரை உறுதியாய் பற்றிக் கொள்வது. அவரிடத்தில் குரலெழுப்பி நம்மை ஒப்படைப்பது.

மன்றாடுவோம் : அச்சம் அவநம்பிக்கை எம்மைச் சூழும்போது, இறைவா! உம்மை நோக்கி யாம் எழுப்பும் அபயக் குரலைக் கேட்டு அருள்புரிவாய் என்ற ஆழமான விசுவாசத்தை எம்மில் வளர்த்துவிட உம்மை மன்றாடுகின்றோம்.

நாள் : **11.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	VILAR COLLEGE	SENDIVAKKAM VIVEK NAGAR	SIRUTHANUR ALANGULAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : இலேகியோன் பிடித்தவன் நலம் பெறுதல் மாற் 5: 1-20

தியானம் : சிலவேளை தீமையின் ஆற்றல் கட்டுக்கடங்காமல் இருக்கிறது.

- ✓ தீமை சங்கிலிகளுக்கும் அடங்குவதில்லை.
- ✓ ஆடை அணிவதில்லை.
- ✓ மனிதருக்குரிய அத்தனை மாண்புகளும் அழிக்கப்பட்ட நிலைதான் தீமை ஆதிக்கம் செலுத்தும் மனிதர்.
- ✓ தீமை நம்மில் ஆதிக்கம் செய்ய விட்டுவிட்டால் மனிதருக்குரிய அத்தனை அடையாளங்களையும் இழக்க நேரிடும். யாராலும் நம்மை அடக்க முடியாது.
- ✓ மனித மாண்பை வலியுறுத்தும் சட்டம் திட்டம் பண்பாடு ஆகிய எதற்கும் இடமில்லாமல் போகிறது. நாம் வாழும் இடங்கள் கல்லறைகளாகும். மனிதர்களோடு நம்மால் வாழ இயலாது. நம்மையே நாம் காயப்படுத்த நேரிடும்.
- ✓ நம்மை சுற்றியுள்ள பிறர் மனதில் அச்சத்தை அது தோற்றுவிக்கும். இன்று நம் உள்ளத்திலும், குழுமத்திலும், உலகத்திலும் பெருகிவிட்ட தீமைதான் பெருந்தொற்றின் கட்டுக்கடங்கா ஆட்டத்திற்கு காரணமாகிறது. நலம் பெறுவோம். நலமானதைப் பேசுவோம். நலமானதை மட்டுமே எண்ணுவோம். உலகை நலமடையச் செய்வோம்.

மன்றாடுவோம் : இறைவா! எம் உலகம் நலம் பெற எம்மை நன்மையானவர்களாய் உருமாற்றும். நல்லதையே எண்ணவும், நல்லதையே பேசவும், நல்லதையே செய்யவும் உம் ஆற்றல் தந்து எம்மை வழிநடத்தும்

நாள் : 12.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	CHENNAI PROVINCIALATE	ARANTHANGI CHEMPARUTHIVILAI	CALDWELL COLONY DGL. METTUPATTY
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : இரத்தப்போக்குடைய பெண் நலமடைதல் மாற் 5: 25-34

தியானம் : நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன்.

- ♥ உடலிலோ உள்ளத்திலோ ஆன்மாவிலோ தீராத நோய் நம்மை பீடித்திருந்தால் நாம் கலங்குகிறோம்.
- ♥ எப்படியாவது நோயிலிருந்து குணம் பெற வேண்டும் என்று ஆவலாய் இருக்கிறோம்.
- ♥ அதற்கான நம் எல்லா சக்தி, செல்வம் அனைத்தையும் செலவு செய்கிறோம். இருந்தாலும் நம்மால் குணம் பெற இயலவில்லை.
- ♥ சில நோய்களுக்கான தீர்வு நம் சொந்த முயற்சியால் எட்டப்படுவதில்லை. எத்தனை முயன்றாலும் நாம் வெற்றி பெறாமல் போகிறோம்.
- ♥ இதோ இப்பெண் தன் வழியை மாற்றி ஆண்டவரைத் தேடி வருகிறாள். இத்தனை முயற்சியிலும் ஒன்றும் நடக்கவில்லையே என்று முயற்சியை அவள் கைவிடவில்லை. தனக்கான இறுதி வாய்ப்பை அவள் பயன்படுத்துகிறாள்.

♥ நம்மில் பலர் நம் முயற்சியை பாதியிலேயே விட்டுவிடுகிறோம். இறுதிவரை உறுதியாய் இருந்தால் மட்டுமே நலமடைவோம். உலகில் உறுதிப்பாடு மென்மேலும் வளர நாமும் உறுதிப்பாட்டில் நிலைபெற்றிருக்க இன்றே உறுதி கொள்வோம்.

மன்றாடுவோம் : உலகத்தில் பல தீமைகள் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கக் காரணம், நாங்கள் எங்கள் உறுதிப்பாட்டில் நிலைத்திருக்காமல் பாதியில் நின்றுவிடுவதே என்ற உண்மையை உணர்ந்து இறுதிவரை உறுதியோடிருக்க வரம்தாரும்.

நாள் : **13.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	ASHOK NAGAR	MICHAELPALAYAM	MICHAELPATTI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : யாயீர் மகள் உயிர்பெற்றெழுதல் மத் 9:18, 23-26

தியானம் : விலகிப் போங்கள் சிறுமி இறக்கவில்லை உறங்குகிறாள்.

- பல சமயங்களில் நம் செயல்திறன் தூங்கிக் கொண்டிருக்கலாம். நாம் கூட நன்மையின் ஆற்றல், இறைவனைப் பற்றிக்கொள்ளும் விருப்பம் எல்லோரையும் அன்பு செய்யும் ஆற்றல் நம்மில் இறந்துவிட்டதாக எண்ணிக்கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. அவைகள் நம்மில் தூங்கிக் கொண்டிருக்கின்றன.
- அங்குக் குழுமியிருந்த எல்லோர் கண்களுக்கும் சிறுமி இறந்தவளாகத் தோன்றினாள். இயேசு மட்டும்தான் அவள் தூங்குவதை உணர்ந்தார்.
- உலகின் கண்களைக்கொண்டு நோக்கும்போதெல்லாம் பிறரை நம்மால் சரியாக அடையாளம் கண்டுகொள்ள இயலாது. சரியாக அடையாளம் கண்டுகொள்ளப்படாமலே பலர் இறந்தவர்களாய் கணிக்கப்படுகிறார்கள்.
- இயேசுவின் கண்கொண்டு நம்மை நோக்குவோம். நம் தூக்கம் கலையும். பிறரை நோக்குவோம் அவர்களும் தூக்கத்திலிருந்து எழுவார்கள்.

மன்றாடுவோம் : இறைவா! இறந்து போனவைகளையும் இயேசுவின் கண்கொண்டு நோக்கி விழித்தெழச் செய்யும் வரம் தர உம்மை வேண்டுகிறோம்

நாள் : **14.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	KANCHEEPURAM	MIDALAM	MUTHUPETTAI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1P.M to 7 P.M

இறைவார்த்தை : பார்வையற்றோர் பார்வை பெறுதல் மத் 9: 27-31

தியானம் : தாவீதின் மகனே எங்களுக்கு இரங்கும்

- நம் தனிவாழ்வில் சிலவற்றை நாம் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. காரணம் நமக்கு பார்வைக் குறைபாடு இருக்கிறது. நம் மனம் என்ன நினைக்கிறதோ அப்படியே பிறரைப் பார்க்கிறோம். தீர்ப்பிடுகிறோம்.
- குழுமங்களில் நாம் சந்திக்கும பல பிரச்சினைகளுக்குக் காரணம் பார்வைக் குறைபாடே. பாதி செய்தியைக் கேட்டுவிட்டு மீதியை நாமே நிறைவுசெய்து கொள்வோம். பார்த்தவைகளை உண்மையா? என்று ஆராயாமல் நம் மனம் சொல்லும் தீர்ப்பை எழுதிவிடுகிறோம்.
- பார்வைக்குறைபாட்டால் உலகில் எழுதப்பட்ட தீர்ப்புகள் ஏராளம். உண்டாக்கப்பட்ட காயங்கள், பிரிவினைகள், மரணங்கள் எண்ணிலடங்கா. கடவுளின் கண்கொண்டு பார்த்தால் மட்டுமே நம் பார்வைகள் சரியாகும் என்பதைப் புரிந்து கொள்வோம்.

மன்றாடுவோம் : இறைவா! நான் பார்வை பெற வேண்டும். என் உள்ளம் உன் ஒளி பெற்று புதுப் பார்வை பெற அருள்தாரும்.

நாள் : 15.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	MYLAPORE	DGL FATIMA HOSPITAL	ENAYAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பேச்சிழந்தவர் பேசுதல் மத் 9: 32-34

தியானம் : இவன் பேய்களின் தலைவனைக் கொண்டு பேய் ஓட்டுகிறான்.

- நம்மால் செய்யமுடியாதவைகளை மற்றவர் செய்யும் போது அதை நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாது. இது பரிசேய மனநிலை.
- அவர்களின் செயலுக்கு தவறான காரணம் கற்பிக்க முற்படுவோம். உண்மை திரிக்கப்படுகிறது.
- ''இஸ்ரயேலில் இப்படி ஒருபோதும் கண்டதில்லை'' இப்படி வியந்து பாராட்டுகிறார்கள் மக்கள். மக்களிடம் அகந்தை இல்லை. எளிய மனம் இருக்கிறது. அதனால் உண்மையை அவர்களால் சுலபமாகப் புரிந்துகொள்ள, ஏற்றுக்கொள்ள, வியந்து பாராட்ட முடிகிறது.

நாம் எந்த ரகம் பரிசேயரா? மக்களா? உலகில் பேச்சிழந்த பலரின் உரிமைகள் நிலைநாட்டப்பட எந்த விமர்சனங்களையும் கடந்து நின்று செயல்பட முற்படுவோம்.

மன்றாடுவோம் : இறைவா! எளிய மனம், நன்மை கண்டு வியக்கும் உள்ளம் தா. எதிர்ப்படும் விமர்சனங்களைக் கடந்து, பிறர் தன் உரிமைகளைப் பெற்றிட பேசும் ஆற்றலை அவர்களுக்காய் வென்றெடுக்கும் வரம் தா.

நாள் : **16.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	PALLAVARAM	KAILASAPURAM KOODAL NAGAR HOSPITAL	KANYAKUMARI MADATHUR
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பெத்சாயிதா குளத்தருகில் நலமடைதல் யோவா 5: 1-15

தியானம் : எழுந்து படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்

- பெத்சாயிதா குளத்தருகில் 38 ஆண்டுகளாக உடல் நலமற்றவர் தங்கியிருந்தார். அவருக்கு நலம் பெறவேண்டும் என்ற ஆவல் இருந்தது. ஆனால் அதற்கான முயற்சி குறைவு.
- அவர் தன் சூழலைக் குறை சொல்லிக் கொண்டிருந்தார். குளம் கலக்கப்படும் போது என்னைத் தூக்கிவிட யாருமில்லை. நான் போவதற்குள் அடுத்தவர் போய்விடுகிறார். இப்படித்தான் நாம் செயலற்று இருப்பதற்கு சாக்குப்போக்குகள் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.
- அவர் எந்த அளவுக்கு செயலூக்கம் இல்லாதவராய் இருக்கிறார் என்றால் இயேசு அவரை படுக்கையைத் தூக்கிக் கொண்டு நட என்கிறார். உன் சுமையை நீயே சுமந்து செல் என்று அறிவுறுத்துகிறார்.
- வாழ்க்கையின் நேர்மறைப் பக்கங்களைப் பாராமல் தன் சுமைகளைத் தானே சுமக்க இயலாமல் இருப்பவர்கள் நலம் பெற்ற பின்னும் ஆண்டவரால் எச்சரிக்கப்படுகிறார். இதைவிடக் கேடானது நிகழாதிருக்க இனி பாவம் செய்யாதீர். எப்போதும் கவனத்தோடும் விழிப்போடும் இருப்போம்.

மன்றாடுவோம் : இறைவா! என் சுமைகளை சுமக்க வலிமையான தோள் கொடு. சின்னச்சின்ன சிக்கல்களைக் கடக்க முனையாமல் எங்களை நாங்களே முடமாக்கிக்கொண்ட அறியாமை அகல அருள் தா!.

நாள் : **17.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	POONAMALLEE	NADUVAIKURICHI	THAMIZH PANNAI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பிறவிக் குருடன் குணமாதல் யோவா 9: 1-12

தியானம் : கடவுளின் செயல் இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே. . .

- பிறவியிலேயே சில ஊனங்கள், இயலாமைகள் நமக்கு வாய்த்துவிடுகின்றன. பல சமயங்களில் நாம் அவைகளுக்காக மிகவே வேதனையடைகிறோம்.
- இந்த இயலாமைகள் நம் முழு ஆளுமையையும் முடக்கவும் செய்கின்றன. மற்றவர் நம்மை ஏளனம் செய்யவும் காரணமாகின்றன. இந்த ஊனங்கள், இயலாமைகள் குணமாக்க இயலாதவை அல்ல என்று இயேசு தெளிவுபடுத்துகிறார். நம்மிடம் உள்ள பிறவி ஊனங்களும் குணக்குறைபாடுகளும் இயல்பிலேயே இருக்கிறது என்று சாக்குப் போக்கு சொல்லாமல் ஆண்டவரின் ஆற்றல் நம்மிடம் வெளிப்பட நம்மைத் திறந்து வைப்போம்.
- உலகில் நாம் காணும் பல ஊனங்களும், சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும் மாற்ற இயலாதவை அல்ல. உண்மையான ஆன்மீக ஆற்றலை நம்மில் விழிப்படையச் செய்தால் அனைத்தும் சாத்தியமே. நம்மை இயேசுவைப் போல் வடிவமைப்போம். நம்முள் உறைந்திருக்கும் அளப்பறிய இறையாற்றலை வெளிப்படுத்தி உலகை நலமாக்குவோம்.

மன்றாடுவோம் : இறைவா! என் ஆற்றலை நான் பலமுறை உணராமலே வாழ்கிறேன். என் தனி வாழ்விலும், குழும வாழ்விலும், சமூக வாழ்விலும் உள்ள ஊனங்களை என்னால் களைந்தெறிய இயலும் என்ற அபரிமிதமான ஆற்றலை நான் உணர்ந்துகொள்ள வரம் தாரும்.

நாள் : 18.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	DGL -PROVINCIALATE	PADREGUDI	PUDUKKOTTAI - MARTHANDAPURAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பேய்பிடித்த சிறுவன் பினி தீர்த்தல் லூக் 9: 37-43

தியானம் : எவ்வளவு காலம் நான் உங்களைப் பொறுத்துக்கொள்ள இயலும்.

- ▲ இத்தனை புதுமைகளைக் கண்ட பின்னும் இயேசுவோடு வாழ்ந்த பின்னும் சீடர்களால் சிறுவனின் பேயை ஓட்டி அவனுக்கு குணம் தர இயலவில்லை. இயேசு அவர்களைக் கடிந்து கொள்கிறார்.
- ▲ துறவறத்தில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்து விட்டோம். எத்தனை நாட்கள் அவரோடு செலவழித்திருக்கிறோம் இன்னும் தீமையை விரட்டும் ஆற்றல் என்னிடம் வரவில்லையே. நம் குழுமங்களிலும் நம்மைச் சுற்றியிருக்கும் தீமையை விரட்டுவதாக நாம் போடும் கூச்சல்களும் ஆர்ப்பாட்டமும் தீமையை அதிகப்படுத்துகிறதே தவிர குறைக்கவில்லை. போதாக்குறைக்கு நான் உண்மைக்குக் குரல் கொடுக்கிறேன் என்று நம்மை சமாதானப்படுத்துகிறோம். இயேசுவின் ஆற்றல் பொய்மை கலவாதது. நன்மையால் நிறைந்தது. சுயநலமற்றது.

▲ இயேசுவின் ஆற்றல் கடவுளிடமிருந்து பிறந்தது. நம் ஆற்றல்கள எங்கிருந்து வருகின்றன? ஆணவம், பெருமை. நான் என்ற தன்முனைப்பு சுயநலத்திலிருந்து வந்தால் பேய் ஓடாது. மேலும் பேய்களைக் கூட்டி வந்து சேர்க்கும். சிந்திப்போம்.

மன்றாடுவோம் : இறைவா! உண்மைக்காகவும் நீதிக்காகவும் தீமைகளைக் களையவும் நான் குரல் கொடுக்கும் போது என் ஆற்றல் உம்மிடமிருந்து வருகிறதா? என்று சோதித்துப் பார்த்து பேச எனக்கு ஞானத்தைத் தாரும்.

நாள் : 19.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	MADURAI ROAD	RAJAVUR	SAMMANASUR
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : இயேசுவும் பெயல்செபூலும் லூக் 11 :14-23

தியானம் : என்னோடு இராதவர் எனக்கு எதிராக இருக்கிறார்

- நாம் இயேசுவோடு இணைந்து இல்லையெனில் அவருக்கு எதிராக இருக்கிறோம். அவரோடு இணைந்து மக்களைக் கூட்டிச்சேர்க்காதவர் அவர்களை சிதறடிக்கிறார்.
- நமது பணிகளில் நாம் ஆண்டவரோடு இருக்கிறோமா?
- இயேசுவை நாம் பின்பற்றுவதில் 50 சதவிகிதம் என்று ஒன்று இல்லை. ஒன்றில் நாம் முற்றிலும் சார்ந்திருக்கிறோம் அல்லது எதிராக இருக்கிறோம். பல சமயங்களில் நாம் ரொம்ப மோசமில்லை, பரவாயில்லை என்று நமக்கு நாமே சான்று கொடுத்துக்கொள்கிறோம். உண்மையில் அது சரியானதல்ல. முற்றிலும் இயேசுவை இறைமையை சார்ந்திருந்தால் மட்டுமே மக்களை ஒருங்கிணைக்க இயலும். நாம் வாழும் இடங்களில், குழுமங்களில், சமூகத்தில் மக்களைக் கூட்டிச்சேர்க்க ஒன்றுபடுத்த நம்மால் இயலவில்லை எனில் நாம் இயேசுவோடு இல்லை என்பது தெள்ளத்தெளிவு. பிரிவினை உள்ள குழுமங்கள், நிறுவனங்கள், பங்குத்தளம் இவைகள் எப்போதுமே இயேசுவுக்கு எதிராக இருக்கிறது என உணர்வோம். எனவே சமாதானத்தின் கருவிகளாய் இயேசுவைச் சார்ந்திருப்போம்.

மன்றாடுவோம் : நாம் ஒன்றாய் இருப்பது போல இவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக என்ற இயேசுவின் வார்த்தை எம் குழுமத்திலும், சமூகத்திலும் நிறைவேறுவதாக. அமைதியின் தூதுவர்களாய் எங்களை உருமாற்றும் ஆண்டவரே!

நாள் : 20.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	KOODAL NAGAR	SIRUMALAI	SENGUDI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : உடல் ஊனமுற்ற பெண் குணமடைதல் லூக் 13: 10-17

தியானம் : அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர

- 18 ஆண்டுகள் தீயஆவியால் பீடிக்கப்பட்டு கூன் விழுந்து நிமிர இயலாமல் இருந்த பெண்ணை இயேசு தொட்டு குணமாக்குகிறார். இந்த மகிழ்ச்சிக்குரிய செயல் தொழுகைக்கூடத்தலைவனிடம் கோபத்தை உண்டாக்குகிறது. மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படவேண்டிய சில காரியங்களுக்கு நமக்கு கோபம் வந்தால் நாம் வெளிவேடக்கார பரிசேயர் என உணர்வோம்.
- ஆளுக்கொரு நீதிசொல்லும் பரிசேயரைக் கடிந்து கொள்கிறார். இயேசு தன் ஆடு மாடுகளை ஓய்வுநாளில் பராமரிப்பது தவறில்லை, தன் சகோதரி ஒருவரை குணமாக்குவது தவறு என்று சொல்லும் இரட்டை வேடத்தை சுட்டிக்காட்டுகிறார். நம் நீதி எப்படி? நமக்கு ஒன்று மற்றவருக்கு வேறொன்று காட்டும் பாரபட்சமான நீதியா? அப்படியானால் நாம் வெட்கப்பட வேண்டியவர்கள். 'அவரை எதிர்த்த அனைவரும் வெட்கப்பட்டார்கள்'. மக்கள் எல்லோரும் மாட்சிக்குரிய செயல்களைக்குறித்து மகிழ்ச்சியடைந்தனர். நாம் மக்களாக வாழ்வோம்.

மன்றாடுவோம் : இறைவா! உடலில் அல்ல எங்களுக்கு ஊனம் உள்ளத்தில் இருக்கிறது. நாங்கள் தலைநிமிர்ந்து வாழ எங்களில் நிமிர இயலாதவர்களும் நிமிர்ந்து வாழ அவர்களை குணமாக்க, நலம் பெற்றதன் மகிழ்ச்சியில் நாங்கள் ஊறித்திளைக்க அருள்தாரும்.

நாள் : 21.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	PUDUKKOTTAI PERANGULAM	SEYDUNGANALLUR	THATHANERI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : நீர்க்கோவை நோயாளி குணமாதல் லூக் 14: 1-6

தியானம் : இயேசு பரிசேயன் வீட்டில் உணவருந்தச் செல்கிறார்.

- ♣ நீர்க்கோவை நோயுள்ள ஒருவர் அவர்முன் இருந்தார். இயேசு அவர் தேவையை உணர்கிறார்.
- ♣ எப்போதும் என்ன செய்தாலும் இயேசு தன் பணி பற்றிய தெளிவுடையவராய் இருந்தார். அவர் எல்லா சந்தர்ப்பங்களையும் பணிக்கான தளமாகப் பயன்படுத்துகிறார். இயேசு உணவருந்தச் சென்ற இடத்திலும் தன் குணமாக்கும் பணியைச் செய்கிறார். அந்த நோயாளி கேட்காமலே தானே முன்வந்து அவன் நோயைக் குணமாக்குகிறார். அவர் தன்னிடம் கேட்கட்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. நம்மிடம் எத்தகைய பணித்தெளிவு இருக்கிறது? நாம் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் ஆண்டவராகிய இயேசுவுக்கே செய்கிறோம் என்ற புரிதல் உண்டா? அடுத்தவர் என்னிடம் வந்தால் நன்மை செய்வேன் என்று எண்ணுகிறோமா?

- ♣ எந்தச் சூழலிலும் நம் அழைத்தல் வாழ்வுக்கு சான்று பகரும் மனநிலையோடு வாழ்கிறோமா? உலகை நலமாக்குவதுதானே நம் அழைப்பு. எப்போதும் ஆண்டவரில் ஊன்றி இருந்து உலகை நலமாக்குவோம்

மன்றாடுவோம் : இறைவா! இடைவிடாத பணித்தெளிவு நான் பூமியில் பிறந்ததன் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற தெளிவு இடைவிடாமல் எனை இயக்க வரம் தாரும்.

நாள் : 22.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	THOOTHUKUDI	THIRUMAYAM	VENKATAKULAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பத்துத் தொழுநோயாளர் நோய் நீங்கப்பெறல் லூக் 17: 11-19

தியானம் : காலில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார்.

- ♣ நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்கு நாம் உரிமை உடையவர் என எண்ணிக் கொள்வதால்தான் நன்றியுணர்வு பொங்கி எழாமல் இருக்கிறது. தொழுநோய் கண்ட 10 பேரில் 9 பேர் யூதமக்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த நலம் ஏதோ தாங்கள் யூதர்களாக இருப்பதால் கிடைத்ததாக நினைத்துக் கொண்டதால் கடவுளுக்கு நன்றி சொல்லத் திரும்பி வரவில்லை.
- ♣ ஆனால் சமாரியன் தனக்கு இந்த நலம் கிடைத்தது இறைவனின் பெரும் கருணை என்று நினைத்ததால் நன்றியுணர்வு பொங்கி வழிந்தது. நாம் பெற்றுக்கொண்டிருக்கும் அனைத்து நலன்களுக்கும் நமக்குக் கிடைக்கும் உணவு, வசதியான மருத்துவம், இடவசதி, பயணவசதி, படிக்கும் வசதி, பணிப்பொறுப்புகள் அனைத்திற்கும் நன்றியுணர்வு நம்மில் ஏற்படவில்லை எனில் நாம் நம் நலன்கள் அனைத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக இழக்க நேரிடும்.
- ♣ நன்றியுணர்வு மட்டுமே நாம் பெற்ற நலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிக்கவும் மேலும் அதிக நலன்களை பெற்றுக்கொள்ளவும் நம்மைத் தகுதியுடையோராய் செய்கிறது.

மன்றாடுவோம் : இறைவா! நன்றியால் எம் உள்ளங்கள் நிறைந்திருக்க என் வாய் எப்போதும் நன்றிகளை உரக்க எடுத்துரைக்க உம் அருளாலேயே அனைத்தும் எனக்குக் கிடைத்திருக்கிறது என எண்ணி உள்ளம் உவக்க என்னை நன்றியின் அடையாளமாய் வடிவமைக்க உம்மை இறைஞ்சுகிறேன்.

நாள் : 23.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	THANJAVUR - PROVINCIALATE	VICHOOR	THUVAKUDIMALAI VOC NAGAR
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : இலாசரின் இறப்பும் உயிர்ப்பும் யோவா 11:1-15

தியானம் : நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய்

- சில இழப்புக்கள் நம் வாழ்வில் நடக்க இறைவன் அனுமதிக்கிறார். இலாசர் இறக்க மரியாளும் மார்த்தாவும் அவனுக்காகத் துக்கம் கொண்டாட அனுமதிக்கிறார். இத்துயரம் இந்த அழுகை என் வாழ்வில் நிகழ இறைவன் அனுமதிக்கிறார்.
- சில சமயங்களில் நம் வேண்டுதலை உடனே கேட்காமல் காலதாமதமும் செய்கிறார். இந்த சந்தர்ப்பங்களில் தாம் நாம் நம்பிக்கை இழந்து போகிறோம். நம் நம்பிக்கையை உறுதிப்படுத்தி கடவுளின் மாட்சியை நாம் உணரவே இவை எல்லாம் நிகழ்கிறது. இதனைப் புரிந்து கொள்ள காலம் தேவைப்படுகிறது.
- நம் வாழ்வில் இறைவன் பாராமுகமாய் இருப்பது போல் தோன்றினாலும், நம் வேண்டுதல்களுக்கு பலனில்லாதது போன்ற சூழல் ஏற்பட்டாலும் இந்த இருட்டான சூழலிலும் ஆண்டவரில் உறுதியாக நம்பிக்கைக் கொள்வோம். அப்போது கடவுளின் மாட்சியைக் காண்போம்

மன்றாடுவோம் : இறைவா! இழப்புகள் சாவுகள் வேதனைகள் என்னைச் சூழ்ந்தாலும் எப்போதும் நிலைபெயராமல் உம்மில் நம்பிக்கைக் கொள்ள எனக்கு வரமருளும்.

நாள் : 24.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	MANNAI HARIDRANATHI EAST	ADHICHAPURAM	ATHUKUDI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பார்வையற்ற பார்த்திமேயு பார்வைபெறுதல் மாற் 10:46-52

தியானம் : தாவீதின் மகனே எனக்கு இரங்கும்

- பல சமயங்களில் நாம் ஒன்றை அடைய விரும்பினாலும் அதற்கான முயற்சியில் தோல்வியடைகிறோம்.
- பார்த்திமேயு தன் இலக்கில் தெளிவாக இருந்தான். உரக்கக் கத்தி இயேசுவிடம் மன்றாட வெட்கப்படவுமில்லை, தயக்கம் கொள்ளவுமில்லை.
- மற்றவர்கள் அவனைக் கடிந்து கொண்டபோதும், பேசாமல் இரு என்று அதட்டியபோதும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. இன்னும் உரக்கக்கத்தினான்.

- இயேசு அழைத்த உடனேயே வாய்ப்பை நழுவவிடாமல் மேலுடையை எறிந்துவிட்டு ஓடினான்.
- பல சமயங்களில் நாம் போர்த்தியிருக்கும் சுய கௌரவம், பெருமை போன்றவை நம்மை இயேசுவிடம் செல்லவிடாமல் நாம் பார்வை பெற இயலாமல் செய்துவிடுகின்றன.
- நம் மேலுடைகளை எறிந்துவிட்டு இயேசு மட்டுமே போதும் என்ற தெளிவில் குதித்தெழுந்து இயேசுவிடம் வருவோம்

மன்றாடுவோம் : நாம் அடைய வேண்டிய நலன்களை அடையத் தடையாக இருக்கும் சுய கௌரவம், பகட்டு, பெருமை போன்ற மேலுடைகளை எறிந்துவிட்டு ஆண்டவரிடம் வரவும் நான் பார்வை பெறவும் இறைவா அருள்தாரும்

நாள் : **25.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	MANNAI RUCKMANIPALAYAM	CHINNAPALLAM	DEVADHANAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : இயேசு பல்வேறு நோயாளிகளைக் குணமாக்குதல் லூக் 4: 40-41

தியானம் : ஒவ்வொருவர் மேலும் தன் கைகளை வைத்து குணமாக்கினார்

◊ மாலை வேளையில் பிணியாளர்கள் பலரை மக்கள் இயேசுவிடம் கொண்டு வருகிறார்கள்.

◊ ஒருவேளை இவர்கள் பகலில் பலபல மருத்துவர்களை நாடிச் சென்று சோர்ந்து சுகம் கிடைக்காமல் திரும்பி வந்திருக்கலாம்.

◊ எல்லா முயற்சிகளும் பலனளிக்காமல் போக, நம்பிக்கை இழந்தவர்களாகவும் இருக்கலாம்.

◊ தாமாக இயேசுவை நாடிவரும் சக்தியும் இவர்களுக்கு இல்லை. இப்படி சக்தியற்றவர்கள் பலரை நாம் அன்றாடம் சந்திக்கிறோம். இப்படி ஆற்றல் இல்லாத பலர் நம்மிடையே நம் சமூகத்தில் வாழ்கிறார்கள்.

◊ இவர்களை யாராவது இயேசுவிடம் கூட்டிச் செல்ல வேண்டும். அந்த ஆள் நாமாக இருக்க ஆசைப்படுவோம்.

◊ மனிதர்களின் மாலை வேளையில் அவர்களுக்கு ஆறுதலாக இருக்கவே இன்று உலகில் ஆள் குறைபடுகிறது.

◊ தனிமை, முதுமை, நோய், மருத்துவமனை இப்படி சோர்ந்து போயிருக்கும் பலரை இன்று நாம் சந்திக்கிறோம். மாலையின் சோர்வினால் தளர்வுற்ற இவர்கள் வாழ்வுக்கு மருந்துபோட காயங்களைக் கட்ட இயேசு நம்மைத்தான் அழைக்கிறார்.

மன்றாடுவோம் : மனித வாழ்வின் மாலை நேரம் மிகவும் வருத்தம், தனிமை, கவலை நிறைந்தது. இந்த நேரத்தில் கரம் பிடித்து அழைத்துச் செல்லவும், உடனிருந்து கவனிக்கவும் ஆட்கள் தேவை. இறைவா! என்னை இப்பணியில் பணப்படுத்தும்.

நாள் : **26.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	POOKARA STREET	KARUNKANNI	KORADACHERI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : இயேசு கடல் மீது நடந்து வருதல் மத் 14: 22-33

தியானம் : துணிவோடிருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள்.

- எல்லா நோய்களுக்கும் அடிப்படைக்காரணம் அச்சம் என்று உளவியலார் கருதுகின்றனர்.
- அச்சம் துன்பங்கள், பிரச்சினைகளை பூதாகரமாக்கி நமக்குக் காட்டுகிறது. அதனால் நம்பிக்கை இழக்கிறோம்.
- நண்பர்களைக்கூட எதிரிகளாகக் காட்டுகிறது. இயேசுவையே பேயாக அவர்கள் காணச் செய்கிறது.
- சரியான வழியில் சென்று கொண்டிருந்தாலும் அச்சம் நம்மைத் தடுமாறி விழச் செய்கிறது. (இராயப்பர் பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சினார். விழுந்தார்.)
- உலகில் ஏற்படும் பெரும்பான்மையான பிரச்சினைகளுக்குக் காரணம் அச்சம்தான். நாடுகள் ஒன்றை ஒன்று அடக்க நினைப்பதும் அச்சமே. இந்த அச்சம் நீங்கினால் நம்மிலும், குழுமங்களிலும், சமூகத்திலும், அன்பும் அமைதியும் நிறைந்து மகிழ்ச்சி உண்டாகும். அச்சம் என்ற மடமையைத் தவிர்ப்போம்.

மன்றாடுவோம் : இறைவா! அச்சத்தினால் ஏற்படும் அவநம்பிக்கை நாங்கள் வாழும் உலகை வெகுவாக அலைக்கழிக்கிறது. பெருந்தொற்று எம் மக்களிடத்தில் அச்சத்தையே தோற்றுவித்திருக்கிறது. எங்கள் உலகை அச்சத்திலிருந்து காத்தருளும்.

நாள் : **27.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	PATTUKOTTAI – MADHA KOIL STREET	MADHAKOTTAI	MANAMBUCHAVADI
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : தொழு நோயாளர் நலம் பெறுதல் மத் 8: 1-4

தியானம் : நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் இயலும்

- நான் விரும்புகிறேன் உமது நோய் நீங்குக

நம்மிலிருந்து நோய் நீங்க முழு விடுதலை பெற:

- ஆழ்ந்த இறைத்தொடர்பு, மன உறுதி நோய்க்கான காரண காரியங்களிலிருந்து விடுதலை பெற வேட்கை
- கடவுளால் மட்டுமே இது முடியும் என்ற பரிபூரண உணர்வு இவைகள் மட்டுமே இவ்வித நாட்பட்ட நோயிலிருந்து நம்மை மீட்டெடுக்க முடியும்.
- நோய் நீங்கிய பின் நன்றி நிறைந்த சாட்சிய வாழ்வு வாழவும் சிறப்பு அழைப்பு விடுக்கிறது.
- உடல் உலகத் தேவைகளுக்காக உணர்வலைகளில் சிக்கிக்கொள்ளாமல் இறைபதம் நாடுவதும் நலம் பெற அடிப்படை தேவை.
- இந்தப்பெருந்தொற்று காலத்தில் எதிர்மறை உணர்வுநிலைகள் நம் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்து நம்மை நிரந்தர நோயாளியாக ஆக்கிவிடும்
- அரசு காட்டும் வழிமுறைகள், நேர்மறை எண்ணங்கள், உணவு, உடல் உழைப்பு, உடற்பயிற்சி, தியானம், செபம், நம் மூத்த சகோதரிகளைப் போல் இறைவன் மீது ஆழ்ந்த பற்றுருதி இவையே நம் நோய்களிலிருந்து விடுதலைக் கொடுக்கும்.

மன்றாடுவோம் : எல்லாவிதமான நோய்களிலிருந்தும் விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கையை எம்மில் அதிகமாக்கும்.நேர்மறை ஆற்றலால் எம் நோய் எதிர்ப்பாற்றலை வளர்க்க வழிதர வேண்டுகிறோம்.

நாள் : 28.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	THIRUTHURAIPOONDI	NADUVATTAM	NAGAPATTINAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : கூரைமீதிருந்து இறக்கப்பட்ட முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்துதல் மாற் 2: 1-12

தியானம் : மகனே! உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன

- முடக்குவாதமுற்றவன் எப்படியாவது குணம் பெற்றுவிட வேண்டும் என்ற ஆவலில் வீட்டின் கூரையில் திறப்பு உண்டாக்கி இயேசுவிடம் கொண்டு செல்கிறார்கள்.இயேசுவும் அவனைக் குணமாக்குகிறார். இந்தப் பெருந்தொற்றில் நம்மைக் காத்துக்கொள்ள நாமும் சில வழிகளைப் பின்பற்ற வேண்டும்.
- அன்னை மரியாவைப் போன்று இறைவனால் எல்லாம் முடியும் என்ற நம்பிக்கை உணர்வோடு உடல் உள்ள தேவைகளை அணுக வேண்டும்.
- இந்த நோய் தொற்றுக்காலத்தில் மருத்துவர், தாதியர், முன்களப்பணியாளர் மற்றும் அரசாங்க மருத்துவ நெறிகாட்டுதல்களைப் பின்பற்றி வாழப் பழக வேண்டும்

- இறையருளால் நமக்குக் கிடைக்கும் உணவை, மருந்துகளை, தடுப்பு முறைகளை நன்றி உணர்வோடு மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- இந்த உணவு, மருந்து பற்றாக்குறையிலும் இறைவன் நம்மைப் பராமரிப்பதை எண்ணி நன்றியில் நிலைத்திருக்க வேண்டும்.
- இறைமாட்சிக்காக நமது எண்ணமும், வாழ்வும் அன்னை மரியாவைப் போல் இறைவனை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும். இதுவே நமது நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்த முழுமுதற்காரணம்.

மன்றாடுவோம் : அன்னை மரியாள் காட்டும் வழியில் நின்று இறைப்பற்றுறுதியில் நிலைத்து நோய்த் தொற்றிலிருந்து காக்கப்பட அருள்தாரும்.

நாள் : 29.07.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	THIRUVARUR – KANDAPPA MADA STREET	NORTH GATE	OOTY
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : அப்பம் பகிர்ந்தளித்தல் யோவா 6:1-15

தியானம் : இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?

- உணவு என்பது பகிரப்பட வேண்டிய ஒன்று. வயிறு என்னும் சூளையில் ஏற்படும் பசி என்ற வெப்பத்தை தணிப்பதே உணவு. மேலும் உணவு என்பது மண் நீர் காற்று போன்ற பஞ்சபூதங்களின் கலவை. அப்படியென்றால் உணவின் மகத்துவத்தை பெரும் சக்தியைப் புரிந்துகொள்வோம். இதில் உணவளிக்கும் தாயின் சக்தியும் இணையும் போது மாபெரும் சக்தி கலவையாக ஊற்றெடுத்து உயிர்களை வாழ வைக்கிறது.
- அன்றாடம் உண்ணும் உணவில் இந்த சக்தி பரிமாற்றம் நம் உடலின் ஒவ்வொரு செல்லிலும் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது.
- அப்படியென்றால் உணவு உண்ணும் போது அல்லது உணவை உணவுப்பொருட்களை பிறருடன் பரிமாறிக்கொள்ளும் போது நமது மனநிலை மகிழ்ச்சி நன்றி உணர்வுடன் திகழ வேணடும்.
- இல்லையேல் உணவு உண்ணும்பொழுது ஆசைக்காகவோ சுவைக்காகவோ எதிர்மறை எண்ணங்கள் உணர்சிகளுடனோ உண்ணும்பொழுது விஷத்தை உணவாகக் கொள்கிறோம். இதனால் ஏற்படும் உடல் உபாதைகளை நாம் தெளிவாக அறிவோம்.

மன்றாடுவோம் : நாம் உண்ணும் உணவு நமக்கும் பிறருக்கும் நிறைவையும் உயிரூட்டத்தையும் தர வேண்டும் என்று மன்றாடுகிறோம்.

நாள் : **30.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	VAILANKANNI	G.PATTINAM	IRUDAYAPURAM
நேரம்	7 A.M to 7 P.M	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : கெனசரேத்தில் நலமளித்தல் மத் 14: 34-36

தியானம் : ஆடையின் விளிம்பை தொட்டனர். தொட்டவர் அனைவரும் குணமாயினர்.

இந்த பெருந்தொற்றுக் காலத்தில் இந்த இறைத்தொடுதல் மிக அத்தியாவசியமாயிருக்கிறது.

இந்த இறைத்தொடுதலை நாம் எப்படி அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்?

பிறருக்கு நாம் எப்படி இறைத்தொடுதலின் நம்பிக்கை விளக்குகளாய் வெளிச்சம் தந்து கொண்டிருக்கிறோம்?

இந்த இறைத்தொடுதலை நம் அன்றாட வாழ்வில் நம் குணமடைதலில் எப்படித்தான் அனுபவிக்கலாம்?

- நமது அன்றாட திருப்பலி நற்கருணை ஆராதனை செப திருவழிபாடு திருவருட்சாதனக் கொண்டாட்டங்களில்…
- நமது ஏழ்மை அன்பு கீழ்ப்படிதல் வார்த்தைப்பாட்டு வாழ்வின் மூலம்
- நமது தனிசெபங்களில் காலை மாலை தியான நேரங்களில்
- நமது அன்றாட அலுவல்களில் குழும தனிநபர் உறவுகளில்
- உணவில் உணவு நேரங்களில் நல்ல சமாரியனாய் உதவும் தருணங்களில்
- தொடுதல் குணமளித்தல் வாழ்விற்கு நாம் பரிச்சயமாக வேண்டாமா?
- இந்த இறைத் தொடுதலில் நோய்ப்பெருந்தொற்று ஆக்ஸிஜன் குறைபாடு நம்மை விட்டு அகன்றுவிட்டதா?
- கடும் முயற்சி செய்வோம்.

மன்றாடுவோம் : இறைவா! நீர் எம்மைத் தொடுவதை நாங்கள் உணர அருள்தாரும். உம் தொடுதலின் ஆற்றலினால் நாங்கள் சக்தி பெற்றவர்களாய் அனைத்து நோய்களும் நீங்கப் பெறுவோமாக.

நாள் : **31.07.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	VILAR MATRIC VAILANKANNAI HOSPITAL	THIRUVARUR – RAMKEY NAGAR VADAGARAI
நேரம்	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : காதுகேளாதுவர் நலம் பெறுதல் மாற் 7: 31-37

தியானம் : இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று; குணமாக்குகிறார்.

- தனிமைப்படுத்துதல் என்பது பெருந்தொற்றிற்கான தீர்வு மட்டுமன்று.
- இறைவன் நம்மைக் குணப்படுத்தவும் நெறிப்படுத்தவும் இந்த தனிமைப்படுத்துதல் தனிமைப்படுத்திக் கொள்ளுதல் மிகமிகத்தேவை.
- இறைவன் நம்மை சில பல உடல் உள்ள உணர்ச்சிகள் சீர்குலைவு என்ற சமனற்ற நிலைகளிலிருந்து விடுவிக்க அமைதிப்படுத்த நம்மை தனிமைக்கு தனிமையாய் அழைப்பதை உணர்ந்திருக்கிறோமா?
- அவரது அந்த மெல்லிய வார்த்தைகளற்ற அந்த சமிக்ஞைகளை தொடுதலை அனுபவப்பட்டிருக்கிறோமா?
- நமது செவித்திறனற்ற நிலைகளை எப்படி குணப்படுத்திக் கொள்ளப்போகிறோம்?
- இறைகுரலுக்கு நல் வார்த்தைகளுக்கு நமது காதுகள் மந்த நிலையில் இருக்கிறது என்ற நிலையையாவது புரிந்து வைத்திருக்கிறோமா?

இல்லையென்றால் எத்துணை வருத்தத்திற்குரிய நிலை நமது?

- நமது எண்ண ஆன்மீக மந்த நிலையை கடவுள் உணர்ந்து நம்மை சைகையால் தனிமைக்கு அழைத்துச் செல்லும் பொழுது இந்த உலகக் காரியங்கள் என்ற கூட்டத்தை விட்டு அவர் அழைக்கும் தனிமைக்கு செல்வோம்.
- அவர் விரும்பும் நலன்கள் குணங்கள் பரிபூரணமாகக் கிடைக்கும்.
- முழுமையாய் நம்புவோம். உடன் செல்லுவோம் நம்முடனிருக்க விரும்பும் நிலையான தெய்வத்திடம்.
- இன்று இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என்று அவரும் மகிழ்ந்து காதோடு காதாய் சொல்வார். நமது குணம் பெற்ற காதுகளில் தெளிவாகக் கேட்கும்

மன்றாடுவோம் : இறைவா! தனிமையில் உம்மோடு நேரம் செலவிட உம் வார்த்தைகளை நான் செவிமடுத்துக் கேட்க என் இதயத்தை பண்படுத்த உம்மை மன்றாடுகின்றோம்.

நாள் : 01.08.2021

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	THERKU POIGAINALLUR THATCHANKURICHI	SIRKALI SANJAY NAGAR
நேரம்	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : கானானியப் பெண்ணின் நம்பிக்கை மாற் 7:24-30

தியானம் : அவரிடம் முழு மையாய் சரணாகதி அடையும் அனைவரையுமே அவர் தூங்கிக்கொள்கிறார்.

நல்லவர்கள் உயர்குலத்தோர் பக்தி மிகுந்தோர்க்கு மட்டும் இறைவன் சார்பாய் இருப்பதில்லை. இந்தக் காலகட்டத்தில் நம்மிடம் உள்ள "**பாகுபாடு**" என்ற பெருந்தொற்றை களைந்தெறிய வேண்டும். மன பாகுபாடுகள் மிக ஏராளம் தாராளம்.

பாகுபாடுகள் பட்டியல் மிக நீண்டது:

- ✡ பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மொழி இன நாடு மதம் என பிரிவினைகள்
- ✡ சாதீயம் என்ற எண்ணப் பெருந்தொற்று
- ✡ பரிசேயன் பக்திமான் கடவுளை நம்பாதவன் என்ற கட்சி பேதம்
- ✡ படித்தவன் படிக்காதவன் பாமரன் ஏழை பெருந்தொழில் சிறுதொழில் குறுந்தொழில் பண முதலீடு வட்டிக்கு வாங்குபவன் என்ற கருத்து பேதங்கள்....இன்னும் நீண்டுகொண்டே போகும் பட்டியல்

நடைமுறைக்கு:

- ❁ இறைவன் என்ற என் நம்பிக்கை சரணாகதி உணர்வு எனது வாழ்வில் எத்தனை விழுக்காடு முறையில் உள்ளது?
- ❁ பலவிதமான பாகுபாடுகள் என்ற பெருந்தொற்றின் தரம் நிலை எண்ணிக்கை இறப்பு எத்தனை?
- ❁ இந்த எனது பாகுபாடு என்ற பெருந்தொற்றால் எத்தனை பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்?
- ❁ இந்த எனது நோய்தொற்றால் எத்தனை பேர் மருந்து என்ற நம்பிக்கை தட்டுப்பாட்டிலும் கடவுள் என்ற ஆக்ஸிஜன் குறைபாட்டிலும் அவநம்பிக்கை என்ற இறப்பின் விளிம்பை நோக்கி தீவிர சிகிச்சை பிரிவில் போராடிக்கொண்டிருக்கின்றனர்?
- ❁ எத்தனை இறப்பு நிகழ்வுகள்?
- ❁ மனம் மாறி பேதங்களற்ற இறைவனிடம் சரணாகதி அடைவோம். நம்முடன் வாழ்பவரையும் இந்தப் பாதையில் பயணிக்க வைப்போம் நமது உண்மை வாழ்வால்.

மன்றாடுவோம் : பாகுபாடுகள் போன்ற மன அழுக்குகளை, மனத்தின் அடி ஆழத்தில் பதிந்துவிட்ட பதிவுகளை உம் இரத்தத்தால் கழுவி தூய்மையாக்க உம்மை வேண்டுகிறோம்.

நாள் : **02.08.2021**

ஆண்டவர்முன் மண்டியிடும் குழுமங்கள் :

குழுமம்	PERUMPANNAIYUR PATTUKOTTAI CBSE	PALATHADY PADALUR
நேரம்	7 A.M to 1 P.M	1 P.M to 7 P.M

இறைவார்த்தை : பெத்சாய்தாவில் பார்வையற்றவர் நலமடைதல் மாற் 8: 22-26

தியானம் : நான் பாவை பெற வேண்டும்

பார்வையற்றவரது கையைப்பிடித்து ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றார். நலமடைந்து முழுப்பார்வை பெற்றபின் ஊரில் நுழைய வேண்டாம் என்று அவருடைய வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

நமது பார்வை கண்ணோட்டக் குறைபாடுகள் என்ன?

கழுகுப் பார்வையா? அன்புப் பார்வைக் குறைபாடா?

குற்றங்களை கூர்ந்து நோக்கும் பார்வைத் திறனா?

சந்தேகம் அல்லது பொறாமை நிறைந்த கண்ணோட்டமா?

விட்டத்தை மறைத்து தூசிகளை உற்று நோக்கும் கேமராப் பார்வையா?

மொத்தத்தில் கண்ணில் குறைபாடா?

சில பார்வைகளுக்கு பழகிவிட்டதால் கண்ணாடிகளும் மின் விளக்குகளும் நமக்குத் துணை புரிகின்றதா?

நமது கண் பார்வையை தந்தைக் கடவுளுடைய அன்புப் பார்வையாக அதையே அகப் பார்வையாக மாற்றி அறுவை சிகிச்சை செய்து நாம் பார்வை மாற்றம் பெற நம்மை ஊருக்கு வெளியே அழைக்கின்றார்.

தொலைவிடத்திற்கு நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள கைப்பிடித்து அழைக்கின்றார். இந்த ஊருக்கு வெளியே இருக்கும் தனிமைதானே துறவறம்.

நமது துறவற அறுவை சிகிச்சை அறையில் செய்யப்படும் வைத்திய முறைகளுக்கு இறைவனோடு ஒத்துழைக்கிறோமா?

மன எண்ணங்கள் ரீதியாக உலகம், ஊர், மதம், சாதி, பணி, பதவி என்ற பாதுகாப்புகளிலிருந்து தனிமைக்கு அழைக்கும் இறைவனுடன் உடன் பயணிக்க அடம் பிடிக்கிறோமா?

- மனம்மாறி பார்வை பெற்றவர்கள் திரும்பி மீண்டும் ஊருக்குள் நுழையாமல் ஆலயம், அன்பு, துறவறம், சேவை என்ற வீட்டிற்குள் தங்கி இருப்போம். பார்வைக்குறைபாடு என்ற கரும்பூஞ்சை என்ற மறுதொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வோம்.
- பார்வை பெற வேண்டும் என்ற ஏக்கம் உள்ளவர்கள் இயேசு நம்மைக் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் இடத்திற்கு செல்வோம்.
- அவர் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் இடம் பாலைவனம், தோட்டம், குழுமம், கிராமம் எது வேண்டுமானாலும் இருக்கட்டும் பார்வைத்தெளிவு மட்டும் நிச்சயம் வாழ்வுப் பரிசாய் கிடைக்கும்.
- பூரணமாய் நம்பித் தொடங்குவோம் புது வாழ்க்கையை.

மன்றாடுவோம் : சரியான பார்வையால் மட்டுமே எம் இலக்காகிய உம்மைக் கண்டுகொள்ள இயலும். பொய்யான பலவற்றை உண்மை என நம்பி ஏமாந்த என் பார்வைக் குறைபாடுகள் நீங்கி புதுப்பார்வை பெற இறைவா! எனக்கு அருள்தாரும்.